# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள். 06.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP 2382/D/2024**

திரு K.ஜெயசந்திரன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு,
சென்னை - 600 107. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 16.02.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | ---- |
| பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவின் நாள் | 07.05.2024 |

******

**ஆணை**

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு K.ஜெயசந்திரன் ஆஜராகவில்லை. மனுதாரர் இவ்வாணையத்திற்கு 29.06.2026 தேதியிட்ட மின்னஞ்சல் வாயிலாக உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் ஆணையத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லையென்றும், இவ்வழக்கின் விசாரணையை வேறு தேதியில் காணொளி காட்சி மூலம் நடத்துமாறும் ஆணையத்தைக் கோரியுள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி M.சசிகலா, உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு, சென்னை - 600 107 அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 16.02.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கணபதி மாநகர் வீட்டு உரிமையாளர் நலப் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பாக 05.12.2021 பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவினை 14.12.2021 அன்று விரைவு தபாலில் அனுப்புள்ளதாகவும், அம்மனுக்கள் மீது எடுத்த நடவடிக்கை விவரம் தொடர்பான தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், மேலாண்மை இயக்குனர் அலுவலகம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு, சென்னை - 600 107அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 18(1)ன் கீழான 07.05.2024 தேதியிட்ட புகார் மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை 23.02.2024 மற்றும் 17.02.2025 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை பதிவஞ்சல் மூலம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இப்புகார் மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஓம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.CP 2382/D/2024**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு,
சென்னை - 600 107.

**மனுதாரர்**
திரு K.ஜெயச்சந்திரன்,
த/பெ. திரு T.கனகரத்தினம்,
க.எண்.M.D.545, 3-வது பிளாக்,
கணபதி மாநகர்,
கணபதி அஞ்சல்,
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 006.

***Copy to: File***
***VP / PA***